தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 355/ந/2023
நாள் 11.12.2023

சின்னமணி தெரு பொதுமக்களின் சார்பாக,
டாக்டர்.D.சிவகாமி,
திருமங்கலம், மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், திருமங்கலம், ஜவஹர் நகர், சின்னமணி தெரு பொதுமக்கள் சார்பாக மனு சமர்ப்பித்தவர்களில் ஒருவரான டாக்டர்.D.சிவகாமி என்பவரின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2023 அன்று பெறப்பட்டு 355/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், திருமங்கலம், ஜவஹர் நகர், சின்னமணி தெரு பொதுமக்களின் சார்பாக நாளிடப்படாத முறையீட்டு மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளனர்:–

"திருமங்கலம் நகரின் பேருந்து நிலையத்தின் பக்கவாட்டில் அதிக போக்குவரத்து நிறைந்த மதுரை ரோட்டிலிருந்து ஜவஹர் நகர் செல்லும் பாதை சின்னமணி தெரு ஆகும். இத்தெருவில் அரவிந்த் கண் மருத்துவமனை, SKG பல்நோக்கு மருத்துவமனை, சுபம் மருத்துவமனை, கஸ்தூரிபாய் மோகன்தாஸ் மருத்துவமனை, செந்தில்குமரன் (இதயநோய் நிபுணர்) மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகள், கூட்டுறவு வங்கி மற்றும் பல வணிக நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மேலும் திருமங்கலம் பேருந்து நிலையம் மற்றும் வெளியூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து இறங்கி வரும் பயணிகள், திருமங்கலத்தின் மேற்கு பகுதியான கணபதி நகர், அண்ணா நகர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் முகமதுஷாபுரம் செல்வதற்குரிய முக்கிய வழியாகும்.

இப்பாதையில் பாதியினை ஆக்கிரமித்து கட்டணக் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. மேலும் தெருவின் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தனி நபர்கள் கட்டணம் வசூலித்து வருகின்றனர். 40 அடி பாதையான இந்த தெரு தனியார்

ஆக்கிரமிப்பினால் 10 அடியாக சுருங்கியுள்ளது. இப்பாதை ஆக்கிரமிப்பினால் மருத்துவமனைக்கு செல்லும் ஆம்புலன்ஸ், இதர வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் மிகவும் சிரமமாக உள்ளது. மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

சட்டவிரோத இந்த ஆக்கிரமிப்பினை அகற்றி, பொதுமக்கள் சிரமமின்றி சென்று வருவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 22.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

திருமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14, ஜவஹர் நகர் தெரு.1 ஆனது திருமங்கலம் நகர் பேருந்து நிலையத்திற்கும், திருமங்கலம் வெளியூர் பேருந்து நிலையத்திற்கும் இடையே அமைந்துள்ள பகுதியாகும். மேற்படி தெருவில் அமைந்துள்ள கழிப்பறையானது போக்குவரத்து பயணிகளின் வசதிக்காக திருமங்கலம் நகராட்சி மூலம் நம்ம டாய்லெட் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிப்பறை ஆகும். பொதுமக்கள் பயன்பாட்டில் இருக்கும் இக்கழிப்பறைக்கு செல்லும் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி கழிப்பறையை பயன்படுத்திவரும் பொதுமக்கள், பேருந்து நிலையத்தினை பயன்படுத்த வரும் பொது மக்கள் மற்றும் பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள கடைகளுக்கு வரும் பொதுமக்கள் ஆகியோர் மேற்கண்ட பகுதியில் இருசக்கர வாகனங்களை நிறுத்தி செல்கின்றனர். இதனால் ஏற்படும் போக்குவரத்து இடையூறுகள், தற்காலிக ஆக்கிரமிப்புகள், ஆகியவை அவ்வப்போது நகராட்சி மற்றும் போக்குவரத்து காவல் துறை மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாக திருமங்கலம் நகராட்சிக்கு புகார்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக ஆறு மாதங்களுக்கு முன்பு தினசரி நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட செய்தி புகாரின் அடிப்படையில் 14.06.2023—ம் தேதியில் காவல்துறையினருடன் நகராட்சிப் பணியாளர்கள் இணைந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பேருந்து நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நிரந்தர ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை. மேற்படி பகுதியில் உள்ள போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து காவல்துறை உதவியுடன் திருமங்கலம் நகராட்சிப் பணியாளர்கள் மூலம் 13.10.2023 அன்று முழுவதுமாக அகற்றப்பட்டது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல், தற்காலிக ஆக்கிரமிப்புகள் எற்படாமல் இருக்க, பேருந்து நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள், கடை உரிமைதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு போக்குவரத்து காவல் துறையின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டது. மீறுபவர்கள் மீது அபராதம் விதிக்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையரும் 23.11.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) சின்னமணி தெருவில் குடியிருக்கும் பொதுமக்கள் சார்பில் மனு சமர்ப்பித்தவர்களில் ஒருவரான டாக்டர்.D.சிவகாமி என்பவர் 23.11.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

(5) எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையர் சார்பாக நகரமைப்பு ஆய்வாளர் திரு.G.வேல்முருகன் 23.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருமங்கலம் நகராட்சி வார்டு எண் 14, ஜவகர் நகர் 1வது தெருவானது, நகரப் பேருந்து நிலையத்திற்கும், வெளியூர் பேருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. அத்தெருவில் உள்ள கழிப்பறை போக்குவரத்து பயணிகளின் வசதிக்காக நகராட்சி மூலம் "நம்ம டாய்லெட்" திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிப்பறையாகும். மேற்கண்ட கழிப்பறை அங்குள்ள பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் நகராட்சி இடத்தில் கட்டப்பட்டுள்ளது எனவும், அங்கு பொதுமக்கள் நடமாட எவ்வித இடையூறும் இல்லை எனவும் மேலும் அங்கு ஆக்கிரமிப்பு ஏதுமில்லை எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கழிப்பிடம் மற்றும் அதற்கு பின்புறம் உள்ள வாகன நிறுத்தும் இடம் நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அங்கு மட்டுமே, பேருந்து நிலையத்திற்கு வருவோர் வாகனங்களை நிறுத்த வேண்டும். ஆனால் கடைகளுக்கு பொருட்கள் வாங்க வரும் ஒரு சிலர் மேற்கண்ட கழிப்பிடம் அமைந்துள்ள தெருவின் இரு புறங்களிலும் வாகனங்களை நிறுத்தி சென்றதைத் தொடர்ந்து, அங்கு நிறுத்தப்படும் வாகனங்களை அப்புறப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் திருமங்கலம் நகராட்சி ஆணையரின் 17.11.2023 நாளிட்ட விரிவான அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, திருமங்கலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சியில் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 40 அடி கொண்ட சின்னமணி தெருவில், 4 மருத்துவமனைகள், கூட்டுறவு வங்கி மற்றும் பல வணிக நிறுவனங்கள் இயங்கி வரும் நிலையில் இச்சாலையினை ஆக்கிரமித்து கட்டண கழிவறை கட்டியும் மற்றும் சாலையின் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி தனிநபர்கள் மூலம் கட்டணம் வசூலித்தும் வருகிறார்கள் எனவும் இவ்வாறு 40 அடியாக இருந்த இத்தெரு தற்போது 10 அடியாக சுருங்கியுள்ளதன் மூலம் மருத்துவமனைகளுக்கு வரும் ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் பொது மக்களின் வாகனங்கள் செல்ல இடையூறாக இருப்பதாகவும் மேலும் பொதுமக்கள் நடந்து செல்லவும் மிகவும் சிரமமாக இருப்பதாகவும் சின்னமணி தெரு குடியிருப்பு பொதுமக்கள் மனு சமர்ப்பித்துள்ளனர்.

மனுவில் புகாராக தெரிவிக்கும் கழிவறை, நகராட்சிக்கு சொந்தமான பாதையில் திருமங்கலம் பேருந்து நிலையங்களுக்கு இடையே 'நம்ம டாய்லெட்' திட்டத்தின்கீழ் கட்டி குத்தகைக்கு விடப்பட்டும் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடமும் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிலையில், கழிவறையை பயன்படுத்தவரும் பொதுமக்களும், அப்பகுதியிலுள்ள வணிகக் கடைகளுக்கு வரும் பொது மக்களும் தங்களது வாகனங்களை இச்சாலையில் நிறுத்துவதால் ஏற்படும் தற்காலிக வாகன ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது நகராட்சியால் அகற்றப்படுவதாகவும், இதனால் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை எனவும் நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆனால், மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள இடத்தில் ஆக்கிரமிப்புகள் இருப்பதாக தினசரி நாளிதழில் செய்தி வெளியிட்டதன் மூலம், நகராட்சியினரால் காவல்துறை உதவியுடன் 14.06.2023 அன்றும் மற்றும் 13.10.2023 அன்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளது என்பதை நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், இதனை தற்காலிக ஆக்கிரமிப்பு என எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். புகாரின் அழுத்தம் அதிகமாகும் சமயத்தில் நகராட்சியினர் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதும், பின்னர் தினமும் வாகனங்களை சாலையில் நிறுத்தி, ஆக்கிரமிப்பு செய்வதுமாக உள்ள நிகழ்வு மனுதாரர் சமர்ப்பித்த புகைப்படங்களின் வாயிலாக தெளிவாக தெரிய வருகிறது.

பல்வேறு மருத்துவமனைகள் அமைந்துள்ள புகாருக்குள்ளான தெருவில், ஆக்கிரமிப்பு செய்து, வாகனங்கள் நிறுத்தி வைப்பதன்மூலம் உயிருக்கு போராடும் நோயாளிகளை ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் குறித்த நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதில் காலதாமதம் ஏற்படும் என்பது நிதர்சன உண்மையாகும். மேலும் பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவியர் சிரமமின்றி எவ்வாறு நடந்து செல்ல முடியும். இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புக்கும் மற்றும் அரசுக்கும் அவப்பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையில் மனுதாரர் தெரிவித்துள்ள புகார் மீது திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் சமர்ப்பித்துள்ள அறிக்கையானது ஏற்கத்தக்கத்தல்ல என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

எனவே, மனுதாரர் தெரிவித்துள்ள புகாரில், உண்மைத்தன்மை உள்ளது என இம்முறைமன்றம் கருதுவதோடு, நகராட்சியில் மருத்துவனைகள் நிறைந்த போக்குவரத்து மிகுந்த 40 அடி பாதையில் நகராட்சியே கட்டண கழிப்பிடம் கட்டி ஆக்கிரமிப்பு செய்து குத்தகை விடுவது, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துதல் மற்றும் பாதையினை ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தும் செயல் ஆகியவற்றை எவ்விதத்திலும் ஏற்க இயலாது என்பதோடு பொறுப்பற்ற முறையில் செயல்பட்டுள்ள திருமங்கலம் நகராட்சி ஆணையாளர், கள அலுவலர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான

நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட சின்னமணி தெருவில் வாகன ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக அகற்றுவதற்கான தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Sustained and regular action should be in force to prevent encroachments on public beneficial spaces vested with the Municipality. A Commando team of Municipal officials should identify such objectionable encroachments on public facilities like pavements and platforms under the control of the Local Body and evict them then and there instead of being lethargic and non-chalant that will only encourage such violations that affect the poor, ordinary, and local citizens. The leadership failure of the Municipal Commissioner in this case is condemned by this Forum.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) சின்னமணி தெரு பொதுமக்களின் சார்பாக,
டாக்டர்.D.சிவகாமி,
Consultant Obstetrician and Gynalcologist,
Gynaec Laparoscopic Surgeon, Subam Hospital,
Tirumangalam, Madurai District – 625 706.

2) ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம்

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்